கிறது. அதனால் பணிப் பதிவேடுகள் நாளதுவரையில் எழுதப் படவில்லை. மேற்கண்ட பொருள்கள் பற்றி கல்லூரி நிர்வாகக் குழுவுடன் கல்லூரி கல்வித் துறை உடனடியாக விவாதிக்க இருக் கிறது. ஆகவே, இதுபோன்ற பிரச்னைகள் 4 கல்லூரிகளிலும் 4 விதமாக இருந்து கொண்டிருக்கின்றன. இப்படிப் பல் வித பிரச்னைகளிலும் ஏறக்குறைய அன்றாட நிர்வாகச் சம்பந்த மான பிரச்னைகளாக இருப்பதால், அவற்றைப் பேசித் தீர்ப்ப தற்கான சீரிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டிருப்ப தன் காரணமாக, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இது குறித்து, விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை யென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச் சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. கவன ஈர்ப்பு.

கலசப்பாக்கம் தொகுதியில் கால்நடைகள் கோமாரி நோயினால் பாதிக்கப்பெற்றுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே,

''கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள துரிஞ்சாபுரம் ஒன்றி யம் பெரிய கிளாம்பாடி மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் மாடு களுக்கு கோமாரி எனும் நோய் ஏற்பட்டு பல கால்நடைகள் இறந்திருப்பது குறித்து''

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகி றேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலை வர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை அவை முன் வைக்கிறேன் :—

அறிக்கை.

வட ஆற்காடு மாவட்டத்தில், உசாம்பாடி, நார்த்தம்பூண்டி பெரிய கிளாம்பாடி முதலிய கிராமங்களில் கோமாரி நோயின் பாதிப்பு 25—1—1981 முதல் 11—2—1981 வரை ஏற்பட்டது. நோய் பற்றிய தகவல் மல்லவாடி கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவருக்கு 11—2—1981 அன்று கிடைத்த பின்பு அன்றே சிகிச்சை ஆரம்பிக்கப் பட்டது. மேற்குறித்த இடங்களில் பாதிக்கப்பட்ட கால்நடைகள் 37. அவற்றில் 4 கன்றுகள் இறந்து விட்டன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 மார்ச் 3] [திருமதி கோமதி சீனிவாசன்]

3. நோய் பற்றிய சோதனைப் பொருட்களை 11—2—1981 அன்றே சேகரித்து இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திற்கு நோய்க் கிருமிகளின் தன்மை பற்றி ஆய்வு செய்ய அனுப்பப்பட்டு மேற்படி நிலையத்திலிருந்தும் ஆய்வு அலுவலர் நோய் பற்றி விரிந்தாய்வு நடத்தி அவரும் நோய்க்கான சோதனைப் பொருட்களை சேகரித்துள்ளார். அது பரிசோதனையிலுள்ளது. ஆய்வு பற்றிய அறிக்கை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலைய இயக்குநரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் நோயின் புறத்தன்மைகளைக் கொண்டு கோமாரி என்று அறிந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் நோய் பரவாமல் தடுக்க தக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

4. துறை அலுவலர்கள் நோயின் புறத்தன்மையைக் கவனித்து பாதிக்கப்பட்ட மாடுகளுக்குக் கவனத்துடன் சிகிச்சை அளிக்கின்றனர். பால் குடிக்கும் கன்றுகளை தாயிடமிருந்து பிரித்துக் கட்டுமாறும், அக்கன்றுகளுக்கு காய்ச்சிக் குளிர வைத்த பாலை அளிக்குமாறும் கஞ்சி போன்ற திரவ உணவினை நோய் கண்ட மாடுகளுக்கு அளிக்குமாறும் விவசாயிகள் மற்றும் கால்நடைச் சொந்தக்காரர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

5. கோமாரி நோய் (Virus) நுண்கிருமியினால் தோன்றுகிறது. இக்கிருமிகளில் 7 முக்கியப் பிரிவுகளும், சுமார் 61 உட்பிரிவுகளும், உண்டு. ஒன்றுக்கான தடுப்பு மருந்து மற்றதுக்கு பயனளிக்காது. ஆகையால் குறிப்பான 4 முக்கிய பிரிவு நுண்கிருமிகளை உள்ளடக்கிய தடுப்பு மருந்து தனியார் துறையில் தயாராவதை விலைக்கு வாங்கி பயன்படுத்த விவசாயிகள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

பொதுவாக கோமாரி நோய்க்கான தடுப்பூசி மருந்தின் விலை ரூ.8 முதல் ரூ 9வரை தனியார் மருந்து கம்பெனி மூலம் தயாரித்து வழங்கப்படுகிறது. இத்தடுப்பூசி மருந்தின் விலை அதிகமாயிருப்பதால், அரசு இலவச தடுப்பூசி அளிக்கும் வசதியை அளிக்கவில்லை. விவசாயிகள் இந்நோய்த் தடுப்பு மருந்தினை வாங்கி அவர்களது கால்நடைகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளனர்.

சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்கள் முதலியோரின் நலன் பாதுகாப்பிற்கு மாநில அரசு, மத்திய அரசு உதவியுடன் கோமாரி நோய்க்கான தடுப்பூசி திட்டத்தை இம்மாநிலத்தில் செயல்படுத்துகிறது. இத் தடுப்பூசி 50 சதவீதம் (விழுக்காடு) விலைக்கும், 50 சதவீதம் (விழுக்காடு) மானியமாகவும் வழங்கப்படுகிறது. மான்யத் தொகையை மத்திய அரசும், மாநில அரசும் சரிவிகிதத்தில் பங்கிட்டு கொள்கிறது.

*திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் 25-ஆம் தேதி அந்தப் பகுதியிலே அந்த நோய் ஏற்பட்டதாகவும் பிப்ரவரி 11-லேதான் அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பார்த்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையில், நான் இந்த மாமன்றத்திலே, இங்கே உங்களிடத்திலே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்ததற்குப் பிறகு, அரசாங்கத்திடத்திலேயிருந்து கடிதம் சென்றதற்குப் பிறகுதான் அந்தப் பகுதிகளுக்கு இந்த அதிகாரிகள் வந்து பார்த்திருக்கிறார்கள்.

சாதாரணமாக, ஒரு பகுதியிலே அப்படிப்பட்ட கால்நடைகளுக்கு நோய் ஏற்படுவதை, ஆங்காங்கு இருக்கிற டாக்டர்கள், சப் சென்டரிலே இருக்கின்ற அலுவலர்கள் எல்லாம் பார்க்க வேண்டும். ஆனால், சரிவர பார்ப்பதில்லை. அவைகளைச் சரிவர கண்காணிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

கோமாரி நோய் ஏற்பட்டு கன்றுகள் இறந்துவிடுகின்றன. அவைகளுக்கெல்லாம் தனிப்பட்டவர்களிடத்திலே மருந்துகள் இருக்கின்றன. அவற்றை வாங்கிப் போட்டுக்கொள்ளலாம் என்று நாங்கள் அறிவுறுத்தி உள்ளோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது அம்மை போன்ற ஒரு நோய். ஊராட்சிமன்றத்தில் கால்நடை வைத்திருக்கின்ற எல்லா விவசாயிகளும் பணம் கொடுத்து மருந்து வாங்கிப் போடுவது என்பது இயலாது. இந்தத் திட்டத்தை அரசாங்கமே செயல்படுத்த வேண்டும். செயல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி 25–1–1981 முதல் 11–2–81 வரை இந்த நோயினால் கால்நடைகள் பாதிக்கப்பட்டன என்றும், நோய்பற்றிய தகவல் 11–2–1981 அன்றுதான் கால்நடை உதவி மருத்துவருக்குத் தரப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் நோய் வந்தவுடனேயே மருத்துவரை அணுகி கூற வேண்டும். ஆனால், அவர்களுக்குக் கிடைத்த தகவல் 11–2–1981 அன்றுதான். கிடைத்த தகவலுக்குப் பிறகுதான் கால்நடை உதவி மருத்துவர் அவர்கள் அந்த இடத்தைப் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நோய்க்கான மருந்துகளை நமது தமிழகத்திலேயே தயார் பண்ணினால் நன்றாக இருக்கும் என்று கூனார். தமிழகத்து கத்திலேயே தயார் பண்ணுகிற அளவுக்கு, நிதிநிலை பற்றா குறையின் காரணமாக இங்கு தயார் பண்ண முடியாத நிலைமை ஏற்படுகிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1981 மார்ச் 3]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோய் கண்டபிறகு சம்பந்தப்பட்ட ஒன்றிரண்டு மருந்துகளைக் கூட வாங்கிப் போட்டு கொள்வது என்றால்கூட அது சாத்தியமாக இல்லை. அம்மை நோய்போன்று இந்தக் கோமாரி நோய் ஒரு இடத்திலே வந்தால் அந்தப் பகுதி பூராவும் பரவுகின்ற தன்மை படைத்ததாகும். ஏழை விவசாயிகள் விலை கொடுத்து இந்த மருந்துகளை வாங்குவதற்கு முடியாமல் இருக்கிறார்கள். இந்த மருந்தை மத்திய அரசிடம் இலவசமாக வாங்கி மாநில அரசு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். இந்தநோயைதடுப்பதற்கு அரசு எந்த முறையிலாவது நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை இந்த விவர அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறேன். எல்லா விவசாயிகளுக்கும் நாங்கள் அவ்வாறு கொடுப்பதில்லை. சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளிகள் முதலியோரின் நலன் பாதுகாப்பிற்கு மாநில அரசு, மத்திய அரசு உதவியுடன் கோமாரி நோய்க்கான தடுப்பூசி திட்டத்தை இம்மாநிலத்தில் செயல் படுத்துகிறது. இத்தடுப்பூசி 50 சதவீதம் விலைக்கும் 50 சதவீதம் மானியமாகவும் வழங்கப் படுகின்றது. மானியத் தொகையை மத்திய அரசும், மாநில அரசும் சரிவிகிதத்தில் பங்கிட்டுக் கொள்கிறது.

5. அரசினர் தீர்மானம்.

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலை—அறிக்கை விவாதம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''பேரவையில் 2—3—1981 ஆம் தேதியன்று வைக்கப்பெற்ற '' தமிழ்நாட்டில் பருவ மழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலை*அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''.

தலைவர் அவர்களே, இந்த அறிக்கை விவரமாக பேரவையில் 2—3—1981 ஆம் தேதியன்றே மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்கு வைக்கப்பெற்றுள்ளது. அந்த அறிக்கை நான் இன்று அவையில்*படித்ததாக எடுத்துக்கொண்டு, நடவடிக்கை குறிப்பில் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக இன்றைக்கு 9 மாவட்டங்களுக்கு 439·77 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கைகளைப் பெற்று எந்தெந்த மாவட்டங்களுக்கு என்னென்ன பணிகள் செய்யப்படும் என்றும், குறிப்பாக குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்காக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மூலமாக வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன

---

*495ம் பக்கத்தில் இணைப்பு ஆக சேர்க்கப்பெற்றுள்ளது.